# SASTRA UNIVERSITY
# M.A. Divyaprabandham
# வினா வங்கி

**Paper VI Core Course IV TIRUVAIMOZH IV**

அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக: (300 வார்த்தைகள்) 7 மதிப்பெண்கள்

Unit 1

1. நண்ணிலாவகையே நலிவான் இன்னம் எண்ணுகின்றாய். (7–1–1)
2. விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறும் ஐம்புலனிவை. (7–1–6)
3. சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும் தாமரைக் கண் என்றே தளரும். (7–2–1)
4. சிட்டனே செழுநீர்த் திருவரங்கத்தாய் இவள் திறத்து என் சிந்தித்தாயே. (7–2–4)
5. என்திருமகள்சேர் மார்பனே என்னும் என்னுடைய ஆவியே என்னும். (7–2–9)
6. பிள்ளைக் குழா விளையாட்டொலியுமறாத் தென்திருப்பேரெயில் சேர்வன் நானே. (7–3–1)
7. காலம்பெற என்னைக் காட்டுமின்கள் காதல் கடலின் மிகப் பெரிதால் (7–3–6)
8. மகரநெடுங்குழைக்காதன் மாயன் நூற்றுவரை அன்று மங்கநூற்ற (7–3–10)

Unit 2

9. அப்பன் ஊழி எழ உலகம் கொண்ட நான்றே. (7–4–1)
10. மலை கீழ்து பிளந்த சிங்கம் ஒத்ததால். (7–4–6)
11. நேர்சரிந்தான் முக்கண்மூர்த்தி கண்டீர் (7–4–8)
12. நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே. (7–5–1)
13. கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும் – சிசுபாலன் (7–5–3)
14. வார்த்தையறிபவர் மாயவற்காளன்றி ஆவரோ. (7–5–10)
15. என்திருமார்பன்தன்னை என் மலைமகள்கூறன் தன்னை. (7–6–7)
16. ஆயர்குலத்து ஈற்றிளம் பிள்ளையொன்றாய்ப் புக்கு. (7–6–10)

Unit 3

17. ஏழையாராவி உண்ணும் இணைக்கூற்றங்கொலோ அறியேன் (7–7–1)
18. வாலியதோர் கனிகொல் வினையாட்டியேன் வல்வினைகொல் (7–7–3)
19. துயரங்கள் செய்து வைத்தி இவையென்ன சுண்டாயங்களே (7–8–7)
20. வல்லதோர்வண்ணம் சொன்னால் அதுவே உனக்காம் வண்ணமே. (7–8–10)
21. ஆம்முதல்வன் இவனென்று தன்தேற்றி. (7–9–3)
22. எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே. (7–9–10)
23. பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பன் அமர்ந்துறையும். (7–10–5)
24. நின்றுதன் நீள்கழலேத்திய ஆனையின் நெஞ்சிடர் தீர்த்தபிரான் (7–10–8)

Unit 4

25. எடுத்தபேராளன் நந்தகோபன்தன் இன்னுயிர்ச் சிறுவனே. (8–1–3)
26. கறந்தபால்நெய்யே நெய்யினின்சுவையே கடலினுளமுதமே. (8–1–7)
27. கடையறப்பாசங்கள் விட்டபின்னையன்றி அவனவை காண்கொடானே. (8–2–8)
28. ஆளுமாளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம். (8–3–3)
29. அன்றேலிப்படிதான் நீண்டு தாவிய அசைவோ பணியாயே. (8–3–5)
30. வார்கடாவருவி யானைமாமலையின் மருப்பிணைக் குவடிறுத்துருட்டி. (8–4–1)
31. தாமரைநீள் வாசத்தடம்போல் வருவானே ஒருநாள் காணவாராயே. (8–5–1)
32. முந்திவந்து யான் நிற்ப முகப்பே கூவிப் பணிகொள்ளாய். (8–5–7)

Unit 5

33. ஒருவரிவரோர் மூவரென நின்று. (8–6–2)
34. கோயில்கொண்டான் அதனோடுமென் நெஞ்சகம். (8–6–5)
35. வெறிதே அருள்செய்வர் செய்வார்கட்குகந்து. (8–7–8)
36. அடியேனுள்ளான் உடலுள்ளான். (8–8–2)
37. என் உணர்வினுள்ளே இருத்தினேன் அதுவும் அவனதின்னருளே. (8–8–3)
38. நின்றமாயப்பிரான் திருவருளாம் இவள் நேர்பட்டதே (8–9–9)
39. சிறுமாமனிசராய் என்னையாண்டார் இங்கே திரியவே. (8–10–3)
40. நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர் மக்களே. (8–10–11)

ஆ) பின்வருவன பற்றி கட்டுரை எழுதுக. (1200 வார்த்தைகள்) 15 மதிப்பெண்கள்

Unit 1

1. இவ்வுலகில் இந்திரியங்களால் படும் துன்பங்களைக் கூறிக் கதறிய நம்மாழ்வாருடைய பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (7–1)
2. பராங்குச நாயகியின் திருத்தாயார் திருவரங்கனைக் குறித்துக் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக. (7–2)
3. தென்திருப்பேரையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானிடம் தனக்குள்ள ஈடுபாட்டைப் பராங்குச நாயகி எவ்வாறு வெளியிடுகிறாள் என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக. (7–3)

Unit 2

4. எம்பெருமான் அவதாரங்களில் செய்த செயல்களைக் கூறி நம்மாழ்வார் தரித்தவாற்றை விளக்கி ஒரு கட்டுரை வரைக. (7–4)
5. எம்பெருமானுடைய விபவாவதார குணங்களை அனுபவியாத இவ்வுலகோர்களின் இழப்பைப் பற்றி நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளவற்றைத் தொகுத்து எழுதுக. (7–5)
6. எம்பெருமானுடைய குணங்களை முழுவதுமாகத் தாம் அனுபவிக்க முடியாத குறையைக் கூறி ஆழ்வார் அருளிச்செய்துள்ளவற்றைப் பற்றி ஒரு கட்டுரை வரைக. (7–6)

Unit 3

7. எம்பெருமானுடைய வடிவழகை உருவெளிப்பாட்டில் கண்ட ஆழ்வார் அருளிச்செய்தவற்றை விளக்கி ஒரு கடுரை வரைக. (7–7)
8. தம்மைக் கொண்டு கவி பாடுவித்துக் கொண்ட எம்பெருமானிடம் ஆழ்வார் விண்ணப்பித்தவற்றைத் தொகுத்து எழுதுக. (7–9)
9. திருவாறன்விளை எம்பெருமானிடம் அடிமை செய்யக்கருதிய ஆழ்வாருடைய பாசுரங்களைத் தொகுத்து வரைக. (7–10)

Unit 4

10. எம்பெருமானைப் பற்றிய விஷயங்கள் தவிர வேறு எவற்றிலும் தனக்கு ஈடுபாடு இல்லை என்று பராங்குச நாயகி கூறியவற்றைத் தொகுத்து எழுதுக. (8–2)
11. எம்பெருமானுக்கு யாரால் என்ன தீங்கு வந்துவிடுமோ என்று அஞ்சி நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (8–3)
12. எம்பெருமானைக் காணவேண்டும் என்று கதறி ஆழ்வார் 'மாயக்கூத்தா வாமனா' என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்தவை பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (8–5)

Unit 5

13. திருக்கடித்தானத்து எம்பெருமான் விஷயமாக ஆழ்வார் அருளிச்செய்த பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதுக. (8–6)
14. தம்மிடத்தில் எம்பெருமான் கொண்டுள்ள ஈடுபாட்டை நம்மாழ்வார் 'இருத்தும் வியந்து' என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்தபடி ஒரு கட்டுரை வரைக. (8–7)
15. அடியவர்களே அடையவேண்டிய பிராப்யம் என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளமை பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (8–10)

# Paper VII Core Course V TIRUVAIMOZH V

அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக: (300 வார்த்தைகள்) 7 மதிப்பெண்கள்

Unit 1

1. இருள்கொள்துன்பத்தின்மை காணில் என்னே என்பாருமில்லை. (9–1–3)
2. போழ்துபோக உள்ளகிற்கும் புன்மையிலாதவர்க்கு (9–1–8)
3. கண்ணனல்லால் இல்லைகண்டீர் சரண். (9–1–10)
4. உன் தாமரைக் கண்களால் நோக்காய். (9–2–1)
5. கிடந்தநாள் கிடந்தாய் எத்தனைகாலம் கிடத்தி. (9–2–3)
6. புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று. (9–2–4)
7. மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக்கு. (9–3–4)
8. தொழுது – எழுதுமென்னுமிதுமிகை யாதலின் (9–3–9)

Unit 2

9. மையார் கருங்கண்ணி கமலமலர்மேல் செய்யாள். (9–4–1)
10. பிழைக்கின்றதருளென்று பேதுறுவனே. (9–4–3)
11. தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன். (9–4–9)
12. கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர். (9–5–8)
13. தழைநல்ல இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே. (9–5–10)
14. நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான். (9–6–4)
15. ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது. (9–6–9)
16. தான் என்னை முற்றப் பருகினான். (9–6–10)

Unit 3

17. நுங்கால்கள் என்தலைமேல் கெழுமீரோ நுமரோடே. (9–7–1)
18. அக்கமலத்திலைபோலும் திருமேனி அடிகளுக்கே. (9–7–3)
19. குறுக்கும் வகையுண்டுகொலோ கொடியேற்கே. (9–8–1)
20. தெருளேதரு தெரு தென்திருநாவாய் என் தேவே. (9–8–8)
21. யாமுடை நெஞ்சமும் துணையன்றாலோ. (9–9–5)
22. தூதுசெய் கண்கள் கொண்டொன்று பேசி. (9–9–9)
23. மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான். (9–10–5)
24. மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க்கெல்லாம். (9–10–7)

Unit 4

25. ஆத்தன் தாமரையடியன்றி மற்றிலம் அரணே. (10–1–6)
26. தயரதன் பெற்ற மரதக மணித்தடத்தினையே. (10–1–8)
27. கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே. (10–2–7)
28. நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கறியச் சொன்னோம். (10–2–8)
29. உன்தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும். (10–3–9)
30. திவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தி. (10–3–10)
31. ஆள்கின்றான் ஆழியான் ஆரால் குறைவுடையம். (10–4–3)
32. எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே. (10–5–1)

Unit 5

33. ஆழியான் அருள்தருவான் அது நமது விதிவகையே. (10–6–1)
34. விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே. (10–6–3)
35. எண்ணாதனகள் எண்ணும் நன்முனிவரின்பம் தலைச்சிறப்ப. (10–7–5)

36. திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என் தலையே. (10–7–8)
37. மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை. (10–8–3)
38. வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே. (10–9–9)
39. கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என் அன்பேயோ. (10–10–7)
40. என் அவாவறச் சூழ்ந்தாயே. (10–10–10)

ஆ) பின்வருவன பற்றி கட்டுரை எழுதுக. (1200 வார்த்தைகள்) 15 மதிப்பெண்கள்

Unit 1

1. உலக உறவினர்கள்அனைவரும் கைவிடத் தக்கவர்கள் என்று ஆழ்வார் அருளிச்செய்த பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதுக. (9–1)
2. திருப்புளிங்குடி எம்பெருமானைக் குறித்து நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளவற்றைத் தொகுத்து எழுதுக. (9–2)
3. ‘ஓராயிரமாய்’ என்று தொடங்கும் திருவாய்மொழியில் நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (9–3)

Unit 2

4. ‘மையார் கருங்கண்ணி’ எனும் திருவாய்மொழியில் நம்மாழ்வார் மகிழ்ச்சியுடன் அருளிச்செய்பவை பற்றி ஒரு கட்டுரை வரைக. (9–4)
5. ‘இன்னுயிர்ச் சேவலும்’ என்ற திருவாய்மொழியில் குயில் முதலியவற்றைப் பார்த்து பராங்குச நாயகி கூறியவற்றைத் தொகுத்து எழுதுக. (9–5)
6. திருக்காட்கரை எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் அருளிச்செய்துள்ளவற்றைத் தொகுத்து எழுதுக. (9–6)

Unit 3

7. திருமூழிக்களத்து எம்பெருமானிடம் ஆழ்வார் விடுத்த தூதைப்பற்றிக் கட்டுரை எழுதுக. (9–7)
8. திருநாவாய் எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் அருளிச்செய்தவை யாவை? (9–8)
9. திருக்கண்ணபுரத்து எம்பெருமானைப் பணியுங்கள் என்று ஆழ்வார் அருளிச்செய்தவற்றைத் தொகுத்து எழுதுக. (9–10)

Unit 4

10. திருமோகூர் எம்பெருமானை ஆழ்வார் வழித்துணையாகப் பற்றியமை பற்றி ஒரு கட்டுரை வரைக. (10–1)
11. திருவனந்தபுரத்திற்குச் செல்லுமாறு ஆழ்வார் உபதேசித்தவற்றைத் தொகுத்து எழுது. (10–2)
12. ஆய்ச்சியரின் காலைப்பூசலாக நம்மாழ்வார் அருளிச்செய்தவை பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (10–3)

Unit 5

13. திருவாட்டாறு எம்பெருமானுடைய சீலகுணத்தை ஆழ்வார் எங்ஙனம் அனுபவிக்கிறார்?.(10–6)
14. தம்முடைய திருமேனியை விரும்பிய எம்பெருமானிடம் ஆழ்வார் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக. (10–7)
15. உடனே எம்பெருமானை அடைந்து விடவேண்டும் என்ற பரமபக்தியுடன் ஆழ்வார் அருளிச் செய்தவற்றைத் தொகுத்து எழுதுக. (10–10)

# Paper VIII Core Course VI SONGS OF SATAKOPA

அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக: (300 வார்த்தைகள்) 7 மதிப்பெண்கள்

## Unit 1

1. இந்நின்ற நீர்மை இனியாமுறாமை (திருவிருத்தம் 1)
2. நிழல்போல்வனர்கண்டு நிற்கும்கொல் மீளும்கொல். (திருவிருத்தம் 3)
3. காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில். (திருவிருத்தம் 8)
4. அரியன யாம் இன்று காண்கின்றன. (திருவிருத்தம் 11)
5. பலபல ஊழிகளாயிடும். (திருவிருத்தம் 16)
6. கோட்டிடையாடினை கூத்து அடலாயர்தம் கொம்பினுக்கே. (திருவிருத்தம் 21)
7. அம்பூந்தேனிளம் சோலையப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே. (திருவிருத்தம் 26)
8. இதுவோ தகவென்றிசைமின்களே. (திருவிருத்தம் 30)

## Unit 2

9. எம்பிரான தடங்கண்களே. (திருவிருத்தம் 42)
10. நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம். (திருவிருத்தம் 45)
11. கொள்வான் ஒத்தழைக்கின்றதே. (திருவிருத்தம் 51)
12. திருமால் கொடியான் என்று வார்கின்றதே. (திருவிருத்தம் 52)
13. நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே. (திருவிருத்தம் 53)
14. மலருளவோ நும் வியலிடத்தே. (திருவிருத்தம் 55)
15. என்னோ இங்களக்கின்றதே. (திருவிருத்தம் 58)
16. திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே. (திருவிருத்தம் 60)

## Unit 3

17. ஆய்க்குலமாய் வந்து தோன்றிற்று நம்மிறையே (திருவிருத்தம் 61)
18. திருநாமச் சொல் கற்றனமே. (திருவிருத்தம் 64)
19. சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே. (திருவிருத்தம் 79)
20. தொல்லை வேங்கடமாட்டவும் சூழ்கின்றிலர். (திருவிருத்தம் 81)
21. ஆய்ச்சி வன்தாம்புகளால் புடைக்கலந்தானை எம்மானை. (திருவிருத்தம் 85)
22. திருமால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினையே. (திருவிருத்தம் 88)
23. வணங்கும் துறைகள் பலபலவாக்கி (திருவிருத்தம் 96)
24. ஞானப்பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே (திருவிருத்தம் 99)

## Unit 4

25. கடலோன் கைமிசைக் கண்வளர்வதுபோல். (திருவாசிரியம் 1)
26. ஓராலிலைச்சேர்ந்த எம்பெருமாமாயனை அல்லது. (திருவாசிரியம் 7)
27. நெறிகாட்டி நீக்குதியோ நின்பால் கருமா முறிமேனி காட்டுதியோ. (பெரிய திருவந். 6)
28. நுண்புடையீர் நும்மை நுமக்கு. (பெரிய திருவந்தாதி 8)
29. சொல்லு நீ யாமறியச் சூழ்ந்து. (பெரிய திருவந்தாதி 16)
30. வாழ்ந்திடுவர் பின்னும் தம் வாய்திறவார். (பெரிய திருவந்தாதி 17)
31. அருளென்னும் தண்டாலடித்து. (பெரிய திருவந்தாதி 26)
32. பேசியே போக்காய் பிழை. (பெரிய திருவந்தாதி 38)

## Unit 5

33. நீயவர்க்கு வைகுந்தம் என்றருளும் வான். (பெரிய திருவந்தாதி 53)
34. மறப்பின்மை யான்வேண்டும் மாடு. (பெரிய திருவந்தாதி 58)
35. வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே. (பெரிய திருவந்தாதி 63)

36. புல்லென்று ஒழிந்தனகொல் ஏபாவம். (பெரிய திருவந்தாதி 68)
37. புகரிலகு தாமரையின் பூ. (பெரிய திருவந்தாதி 72)
38. யான் பெரியன் நீ பெரியை என்பதனை யாரறிவார். (பெரிய திருவந்தாதி 75)
39. ஆழியங்கைப் பேராயற்காளாம் பிறப்பு. (பெரிய திருவந்தாதி 79)
40. என் நினைந்து போக்குவர் இப்போது. (பெரிய திருவந்தாதி 86)

ஆ) பின்வருவன பற்றிக் கட்டுரை எழுதுக. (1200 வார்த்தைகள்) 15 மதிப்பெண்கள்

## Unit 1

1. நம்மாழ்வாரைப் பற்றியும், அவருக்கு எம்பெருமான் அருள்புரிந்தமை பற்றியும், அவர் உடனே எம்பெருமானிடம் வேண்டியவை பற்றியும் ஒரு கட்டுரை எழுதுக. (1)
2. திருவிருத்தத்தில் திவ்யதேசங்களைக் குறித்து அருளிச்செய்யப்பட்ட பாசுரங்களைப் பற்றி ஓர் கட்டுரை வரைக. (8, 10, 15, 26, 28, 31, 60, 81)
3. தோழி கூறுவதாகத் திருவிருத்தத்தில் உள்ள பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (2, 5, 7, 15, 18, 20, 22)

## Unit 2

4. எம்பெருமான் உலகளந்தமை பற்றித் திருவிருத்தத்தில் அருளிச்செய்யப்பெற்றுள்ள பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதுக. (42, 58, 61, 69, 85)
5. திருவிருத்தத்தில் தலைவி கூற்றாக உள்ள பாசுரங்களில் சிலவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (31, 32, 35, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 48, 51, 54, 56,)
6. காலமயக்கு, கட்டுவிச்சி கூறல், வண்டுவிடுதூது, நலம்பாராட்டு, வெறிவிலக்கு ஆகிய துறைகள் அமைந்த திருவிருத்தப் பாசுரங்களை விளக்கி ஒரு கட்டுரை வரைக. (7, 52, 68, 53, 54, 14, 55)

## Unit 3

7. தலைவியின் நிலைகண்டு தோழி இரங்கியதாகத் திருவிருத்தத்தில உள்ள பாசுரங்களில் சிலவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (61, 62, 68, 69, 73, 81, 83, 87, 98)
8. திருவிருத்தத்தில் எம்பெருமானுடைய அவதாரங்களைப் பற்றி அருளிச்செய்யப்பெற்றுள்ள பாசுரங்களில் சிலவற்றைத் தொகுத்து எழுதுக. (61, 69, 77, 78, 79, 85, 86, 89, 91, 97)
8. திருவிருத்தத்தில் அமைந்துள்ள அகத்துறைகள் சிலவற்றைப் பற்றி ஓர் கட்டுரை எழுதுக.

## Unit 4

10. திருவாசிரியத்தில் நம்மாழ்வார் அருளிச்செய்த கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
11. பெரிய திருவந்தாதியில் நம்மாழ்வார் தம் நெஞ்சைக் குறித்து அருளிச்செய்த பாசுரங்களில் சிலவற்றைத் தொகுத்து எழுதுக. (பெரிய திருவந்தாதி 1, 12, 14,15, 19, 23, 37–40)
12. பெரிய திருவந்தாதியில் எம்பெருமானை முன்னிலையாக வைத்து அருளிய பாசுரங்களில் சிலவற்றைத் தொகுத்து எழுதுக? (பெரியதிருவந்தாதி 2 – 8, 11, 13, 16, 18, 34,)

## Unit 5

13. பெரிய திருவந்தாதி என்ற திவ்யப்ரபந்தின் பெயர்க்காரணத்தையும் அதிலுள்ள முக்கியமான கருத்துகளையும் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (பெரிய திருவந்தாதி 75–87)
14. பெரிய திருவந்தாதியில் நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள அவதாரங்கள் சிலவற்றைப் பற்றி ஓர் கட்டுரை வரைக. (பெரிய திருவந்தாதி 41, 42,43, 48, 52, 56, 61–64, 74, 78, 82)
15. வினைகளைப் பற்றிப் பெரியதிருவந்தாதியில் நம்மாழ்வார் அருளிச்செய்த பாசுரங்களில் சிலவற்றைப் பற்றி ஒரு கட்டுரை வரைக. (43, 44, 45, 54, 57, 59, 69, 76, 79, 84)

## Paper IX  Eelective Course III  Songs of Later Azhvars

அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக: (300 வார்த்தைகள்) 7 மதிப்பெண்கள்

### Unit 1

1. மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா. (திருப்பல்லாண்டு 1)
2. அரியை அழித்தவனைப் பந்தனை தீரப் பல்லாண்டு. (திருப்பல்லாண்டு 5)
3. திண்ணென இவ்விரா உன்னைத் தேய்த்துக் கிடக்க நானொட்டேன். (பெரியாழ்.திரு. 2–4–1)
4. நாணெத்தனையுமிலாதாய் நப்பின்னை காணில் சிரிக்கும். (பெரியாழ்வார் திரு. 2–4–9)
5. ஆநிரை மேய்க்க நீ போதி அருமருந்தாவதறியாய். (பெரியாழ்வார் திரு. 2–7–1)
6. ஆமாறறியும் பிரானே அணியரங்கத்தே கிடந்தாய். (பெரியாழ்வார் திரு. 2–7–8)
7. சாளக்கிராமமுடைய நம்பி சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான். (பெரியாழ். திரு. 2–9–5)
8. நானல்லேனென்று சிரிக்கின்றானே. (பெரியாழ். திரு. 2–9–10)

### Unit 2

9. கானகம்படி உலாவியுலாவிக் கருஞ்சிறுக்கன் குழலூதினபோது. (பெரியாழ்வார் திரு. 3–6–3)
10. கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுச் செவியாட்டகில்லாவே. (பெரியாழ்வார் திரு. 3–6–7)
11. அத்திரமே அதன்கண்ணை அறுத்ததுமோர் அடையாளம். (பெரியாழ்வார் திரு. 3–10–6)
12. மிக்க பெருஞ்சவைநடுவே வில்லிறுத்தான் மோதிரம் கண்டு. (பெரியாழ்வார் திரு. 3–10–9)
13. பருகுநீரும் உடுக்கும் கூறையும் பாவம் செய்தன தான்கொலோ. (பெரியாழ்வார் திரு. 4–4–4)
14. பேசுவாரடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே. (பெரியாழ்வார் திரு. 4–4–10)
15. என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப்பொறி ஒற்றிக் கெண்டு. (பெரியா. திரு.5–4–1)
16. இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே. (பெரியாழ்வார் திரு. 5–4–10)

### Unit 3

17. நாராயணனே நமக்கே பறை தருவான். (திருப்பாவை 1)
18. நானேதானாயிடுக. (திருப்பாவை 15)
19. இன்றியாம் வந்தோம் இரங்கு. (திருப்பாவை 24)
20. மற்றை நம் காமங்கள் மாற்று. (திருப்பாவை 29)
21. அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் (நாச்சியார் திருமொழி 6–3)
22. அரிமுகன் அச்சுதன் கைமேல் என் கை வைத்து. (நாச்சியார் திருமொழி 6–9)
23. குறும்பு செய்வானோர் மகனைப் பெற்ற நந்தகோபாலன். (நாச்சியார் திருமொழி 12–3)
24. பத்தவிலோசனத்துய்த்திடுமின். (நாச்சியார் திருமொழி 12–6)

### Unit 4

25. படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே (பெருமாள் திருமொழி 4–9)
26. எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே. (பெருமாள் திருமொழி 4–10)
27. அருள் நினைந்தே அழுங்குழவி அதுவேபோன்றிருந்தேனே. (பெருமாள் திருமொழி 5–1)
28. செங்கலம் அந்தரம்சேர் வெங்கதிரோற்கல்லலால் அலராவால். (பெருமாள் திருமொழி 4–6)
29. நல்வினையில்லா நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே. (பெருமாள் திருமொழி 7–3)
30. தொல்லையின்பத்து இறுதி கண்டாளே. (பெருமாள் திருமொழி 7–8)
31. அரசாக எண்ணேன் மற்றரசுதானே. (பெருமாள் திருமொழி 10–7)
32. அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி. (பெருமாள் திருமொழி 10–10)

### Unit 5

33. அச்சுவை பெறினும் வேண்டேன். (திருமாலை 2)
34. புள்கவ்வக் கீடக்கின்றீரே. (திருமாலை 6)
35. சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே. (திருமாலை 14)

36. உடலெனக்கு உருகுமாலோ என்செய்கேன் உலகத்தீரே. (திருமாலை 19)
37. பாரமாய பழவினை பற்றறுத்து. (அமலனாதிபிரான் 5)
38. என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே. (அமலனாதி. 19)
39. அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே. (கண்ணிநுண். 1)
40. அருள்கொண்டு ஆயிரமின்தமிழ் பாடினான். (கண்ணிநுண். 8)

ஆ) பின்வருவன பற்றி ஒரு கட்டுரை வரைக. (1200 வார்த்தைகள்) 15 மதிப்பெண்கள்

Unit 1

1. பெரியாழ்வார் எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடியமை பற்றியும், மற்றவர்களையும் பல்லாண்டு பாட அழைத்தது பற்றியும் விரிவாக ஒரு கட்டுரை எழுதுக. (திருப்பல்லாண்டு)
2. யசோதை பாவனையில் பெரியாழ்வார் கண்ணபிரானை நீராட அழைத்தமை பற்றி ஒரு கட்டுரை வரைக. (பெரியாழ்வார் திருமொழி 2–4)
3. ஆய்ச்சிகள் கண்ணன் செய்த தீம்புகளை முறையிட்டது பற்றியும், அப்போது யசோதை கூறிய வார்த்தைகள் பற்றியும் பெரியாழ்வார் பாசுரம் கொண்டு கட்டுரை வரைக. (பெரியாழ். திரு. 2–9)

Unit 2

4. கண்ணபிரான் குழலூதியமையைப் பெரியாழ்வார் எங்ஙனம் அருளிச்செய்துள்ளார் என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (பெரியாழ்வார் திருமொழி 3–6)
5. அனுமன் சீதைப்பிராட்டியிடம் கூறியவைகளாகப் பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளவற்றை ஒரு கட்டுரையாக எழுதுக. (பெரியாழ்வார் திருமொழி 3–10)
6. திருக்கோட்டியூர் வாழ் அடியவர்களின் பெருமை குறித்துப் பெரியாழ்வார் அருளிச்செய்தவை குறித்து ஒரு கட்டுரை வரைக. (பெரியாழ்வார் திருமொழி 4–10)

Unit 3

7. மார்கழி நோன்பு பற்றியும், ஆண்டாள் நோன்பு நோற்றமை பற்றியும் ஒரு கட்டுரை எழுதுக.
8. ஆண்டாள் தன்னுடைய தோழிகளைத் துயிலெழுப்பியமை பற்றி ஒரு கட்டுரை வரைக.
9. மதுரை தொடக்கமாக துவராபதி வரை தன்னைக் கொண்டுபோய்விடும்படி ஆண்டாள் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக. (நாச். திரு. 12)

Unit 4

10. திருமலையில் ஏதேனுமாக வேண்டும் என்று குலசேகராழ்வார் அருளிச்செய்த பாசுரங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (பெருமாள் திருமொழி 4)
11. எம்பெருமானைத் தவிர வேறு புகல் அறியதவராகக் குலசேகராழ்வார் அருளிச்செய்த பாசுரங்களைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக. (பெருமாள் திருமொழி 5)
12. தேவகி புலம்பிய புலம்பலாகக் குலசேகரார்வார் அருளிச்செய்தவை யாவை? (பெருமாள். 7)

Unit 5

13. எம்பெருமானுடைய திருநாமத்தின் பெருமை பற்றித் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்துள்ளவை பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (திருமாலை 1–14)
14. பெரியபெருமாளின் வடிவழகைத் திருப்பாணாழ்வார் எங்ஙனம் அருளிச்செய்கிறார்? விளக்குக. (அமலனாதிபிரான் 1–10)
15. நம்மாழ்வாரைத் தவிர தேவு மற்றறியாதவராக மதுரகவியாழ்வார் அருளிச்செய்த பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (கண்ணிநுண்சிறுத்தாம்பு 1–11)

## Paper X Eelective Course IV Later Prabandhams

அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக: (300 வார்த்தைகள்) 6 மதிப்பெண்கள்

Unit 1

1. ஓர் பாதத்தின் முன்செல்லுமோ தொல்லை மூலப் பரஞ்சுடரே. (சடகோபரந்தாதி 1)
2. குருகைப்பிரான் எம்பிரான்றன் இசைக் கவியே. (சடகோபரந்தாதி 6)
3. ஆயிரமாமறைக்கும் அலங்காரம். (சடகோபரந்தாதி 9)
4. தந்தம் விழாவுமழகும் என்னாம். (சடகோபரந்தாதி 14)
5. மறையின் திடலைக் கலக்கித் திருவாய்மொழி எனும் தேனைத் தந்தான். (சடகோபரந்தாதி 16)
6. உங்கள் வேதம் எங்கோன் தமிழ்ச்சொல் எனவே. (சடகோபரந்தாதி 18)
7. குருகைப்பிரான் திருவாணை மலையவனே! (சடகோபரந்தாதி 21)
8. குருகூரெம்பிரான்தன் விழுத்தமிழ்க்கே. (சடகோபரந்தாதி 25)

Unit 2

9. மாறனடிபணிந்துய்ந்தவன் – இராமானுசன். (இராமானுசநூற்றந்தாதி 1)
10. வஞ்சமுக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான். (இராமாநூற்றந்தாதி 7)
11. திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தே இருத்தும் பரமன் இராமானுசன். (இராமாநூற்றந்தாதி 8)
12. தமிழ்த்தலைவன் பொன்னடிபோற்றுமிராமானுசன். (இராமாநூற்றந்தாதி 9)
13. சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல். (இராமாநூற்றந்தாதி 16)
14. யமுனைத்துறைவன் இணையடியாம் கதிபெற்றுடைய இராமனுசன். (இராமாநூற்றந்தாதி 21)
15. தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளனிராமானுசன். (இராமாநூற்றந்தாதி 31)
16. இடையே இராமானுசமுனியாயின இந்நிலத்தே. (இராமாநூற்றந்தாதி 32)

Unit 3

17. தடாதேயொழிமோ தாய். (ஞானஸாரம் 20)
18. அறுத்தற்கிசை தாதையற்று. (ஞானஸாரம் 21)
19. காணும் கண் இல்லாதவன் காண் இறை. (ஞானஸாரம் 24)
20. அன்றதனை ஈன்றுகந்த ஆ. (ஞானஸாரம் 25)
21. விட்டபடைபோல் விடும். (ஞானஸாரம் 28)
22. அனலுமிழ்ந்து தானுலர்த்தியற்று. (ஞானஸாரம் 35)
23. இறையேதுமில்லாதயாம். (ப்ரமேயஸாரம் 6)
24. மறையுடைய மார்க்கத்தே காண். (ப்ரமேயஸாரம் 7)

Unit 4

25. எத்திசையுமுழன்றோடி இளைத்துவீழும் காகம்போல். (அடைக்கலப்பத்து 1)
26. கச்சிநகர்க்கருணைநாதனை நல்லடக்கமாயடைந்தேனே. (அடைக்கலப்பத்து 5)
27. துளவமுடியருள்வரதர் துவக்கிலெனை வைத்தேனே. (அடைக்கலப்பத்து 6)
28. குலவு பதினொன்றும் எனக்குதவு நீயே. (பிரபந்தசாரம் 7)
29. பிழையறவே எனக்கருள்செய் பேணி நீயே. (பிரபந்தசாரம் 14)
30. நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே. (பிரபந்தசாரம் 17)
31. சிதைவில் அருள் தரும் திருமால் திருவத்தி நகரானே. (அருத்தபஞ்சகம் 6)
32. அந்தமிலா அருளாழி அத்திகிரித் திருமாலே. (அருத்தபஞ்சகம் 10)

Unit 5

33. சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து. (உபதேசரத்தினமாலை 1)
34. வையமறியப் பகர்வோம் வாய்ந்து. (உபதேசரத்தினமாலை 34)
35. பேசி வரம்பறுத்தார் பின். (உபதேசரத்தினமாலை 37)
36. அந்தச் செயல் அறிகைக்கா. (உபதேசரத்தினமாலை 38)
37. ஏத்ததனைச் சொல்லி நீ இன்று. (உபதேசரத்தினமாலை 50)

38. விலகாமல் நின்றதென்றும்மேல். (உபதேசரத்தினமாலை 51)
39. தானே வைகுந்தம் தரும். (உபதேசரத்தினமாலை 61)
40. ஊனமற எப்பொழுதுமோர். (உபதேசரத்தினமாலை 66)

பின்வருவன பற்றிக் கட்டுரை எழுதுக. (1200 வார்த்தைகள்) 15 மதிப்பெண்கள்

Unit 1

1. திருவாய்மொழியின் பெருமைகளைக் கம்பர் கூறியவாறு விளக்கி ஒரு கட்டுரை வரைக. (சடகோபரந்தாதி 1–11, 13–19)
2. சடகோபரந்தாதியில் உள்ள அகத்துறைப் பாடல்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (சடகோபரந்தாதி 11, 20, 21, 27)
3. நம்மாழ்வாரின் பெருமைகளைச் சடகோபரந்தாதி கொண்டு விளக்குக. (22–30)

Unit 2

4. திருவரங்கத்தமுதனார் தம்முடைய நெஞ்சைக் குறித்து அருளிச்செய்த பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (இராமானுச நூற்றந்தாதி 1–7)
5. ஆழ்வார்களிடம் இராமானுசருக்குண்டான ஈடுபாடு பற்றித் திருவரங்கத்தமுதனார் கூறுபவை யாவை? (இராமானுச நூற்றந்தாதி 8–19)
6. இராமானுசருடைய பெருமைகள் பற்றித் திருவரங்கத்தமுதனார் அருளியவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (22–35)

Unit 3

7. எம்பெருமானுடைய தன்மைகளைப் பற்றி அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்தவற்றைத் தொகுத்து வரைக. (ஞானஸாரம் 8–25)
8. ஆசாரியனுடைய பெருமைகளை அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்தவாறு விளக்கி ஒரு கட்டுரை எழுதுக. (ஞானஸாரம் 26–38)
9. பிரமேயஸாரம் என்றால் என்ன? அதில் உள்ள கருத்துகளைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (பிரமேய ஸாரம் 1–10)

Unit 4

10. அத்திகிரி தேவப்பெருமாளளைச் சரணம் புகுந்து வேதாந்த தேசிகன் அருளிச்செய்த பாசுரங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக. (அடைக்கலப்பத்து 1–10)
11. பிரபந்த ஸாரத்திலுள்ள விஷயங்களைத் தொகுத்து ஒரு கட்டுரை வரைக.
12. அருத்தபஞ்சகம் பற்றி வேதாந்த தேசிகன் அருளிச்செய்தவை பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (அருத்த பஞ்சகம் 1–10)

Unit 5

13. திவ்யப்ரபந்தங்களுக்கு அமைந்துள்ள வியாக்கியானங்களைப் பற்றி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த பாசுரங்களைத் தொகுத்துக் கட்டுரை எழுதுக. (உபதேசரத்தினமாலை 39–47)
14. நம்பிள்ளையின் பெருமை பற்றியும் அவர் அருளிய ஈடுமுப்பத்தாறாயிரப்படி பற்றியும் மணவாளமாமுனிகள் அருளிச்செய்தவை பற்றி ஒரு கட்டுரை வரைக. (உப.மாலை 44, 48–51 )
15. ஸ்ரீவசனபூஷணத்தின் சிறப்பு பற்றியும் அதிலுள்ள விஷயங்கள் பற்றியும் உபதேசரத்தினமாலை கொண்டு ஒரு கட்டுரை வரைக. (உபதேசரத்தினமாலை 54–65)

இ) மனப்பாடப் பகுதி: கீழ்க்கண்ட (பாசுரங்களிலிருந்து வினாத்தாளில் கேட்கப்படும்) நான்கு பாசுரங்களைப் பிழையில்லாமல் எழுதுக. 20 மதிப்பெண்கள்

சடகோபரந்தாதி 1 முதல் 10 பாசுரங்கள் வரை; இராமானுச நூற்றந்தாதி 1 முதல் 10 பாசுரங்கள்
ஞானஸாரம் 1 முதல் 10 பாசுரங்கள். அடைக்கலப்பத்து 1 முதல் 10 பாசுரங்கள்
உபதேச ரத்தினமாலை 1 மற்றும் 36 முதல் 45 பாசுரங்கள் வரை

வினாத்தாள் அமைப்பு:

அ) கொடுக்கப்படும் எட்டு வினாக்களுக்குள் எவையேனும் ஐந்தினை
இடம் சுட்டிப் பொருள் விளக்க வேண்டும். (5 X 7 = 35 மதிப்பெண்கள்)
(ஐந்தாம் தாளில் மட்டும் 5 X 6 = 30 மதிப்பெண்கள்)

ஆ) கொடுக்கப்படும் ஐந்து வினாக்களுக்குள் எவையேனும் மூன்றினைப் பற்றிக்
கட்டுரைகள் எழுதவேண்டும். (3 X 15 = 45 மதிப்பெண்கள்)
(ஐந்தாம் தாளில் மனப்பாடப் பகுதிகள் உள்ளமையால், அத்தாளில் மட்டும் கேட்கப்படும் நான்கு வினாக்களில் இரண்டிற்கு மட்டும் கட்டுரைகள் எழுதவேண்டும்.)